**செய்தி வெளியீடு எண்: 545** **நாள்: 16.08.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று (16.8.2018) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டம், பாடிக்குப்பம் திட்டப்பகுதியில், தமிழ்நாடு அரசின் 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்காக சுயநிதி திட்டத்தின் கீழ், 69 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 236 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் 70 கோடியே 6 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 602 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 15.9.2015 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிவிப்பில், அரசு அலுவலர்களுக்கு சொந்த வீடு கட்டும் திட்டத்தின் கீழ், 'சி' மற்றும் 'டி' பிரிவு அரசு அலுவலர்களுக்கு சென்னை பாடிகுப்பத்தில் அடுக்குமாடி குடியிருப்புகள் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கட்டப்படும் என்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் மூலம், திருவள்ளூர் மாவட்டம், பாடிக்குப்பம் திட்டப்பகுதியில், தமிழ்நாடு அரசின் 'சி' மற்றும் 'டி' பிரிவு ஊழியர்களுக்காக சுயநிதி திட்டத்தின் கீழ், 2.42 ஏக்கர் பரப்பளவில், 69 கோடியே 57 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 236 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இந்த அடுக்குமாடி குடியிருப்புகள் சுமார் 620 சதுர அடி முதல் 644 சதுர அடி வரை கட்டட பரப்பளவு கொண்டதாகும். இக்குடியிருப்புகள் இரண்டு படுக்கை அறைகள், கூடம், சமையலறை, படுக்கையறையுடன் இணைந்த கழிவறை மற்றும் குளியலறை, குடிநீர் வசதி, கழிவுநீர் வசதி, மின் இணைப்பு வசதி ஆகிய வசதிகளை கொண்டதாகும்.

மேலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மூலம் திருவள்ளூர் மாவட்டம், கொரட்டூரில் 10 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 35 குறைந்த வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருவள்ளூர் மாவட்டம், முகப்பேர் ஏரி திட்டத்தில் 10 கோடியே 44 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 20 உயர் வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

திருவள்ளூர் மாவட்டம், செவ்வாப்பேட்டையில் 1 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 11 மத்திய வருவாய் பிரிவு தனி வீடுகள்;

சென்னை, வேளச்சேரியில் 6 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சுயநிதி திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள 24 மத்திய வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் தஞ்சாவூர் மாநகரில் உள்ள குடிசைப்பகுதிகளில் வாழும் குடும்பங்களுள் ஒரு பகுதியினருக்கு தஞ்சாவூர், பிள்ளையார்பட்டி பகுதி–3 திட்டப் பகுதியில், 2.47 ஏக்கர் நிலப் பரப்பளவில், தரை மற்றும் மூன்று தளங்களுடன், 19 கோடியே 48 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒவ்வொரு குடியிருப்பும் சுமார் 371 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள்;

இராமநாதபுரம், பட்டினம்காத்தான் திட்டப்பகுதியில், 3.07 ஏக்கர் நிலப் பரப்பளவில், தரை மற்றும் இரண்டு தளங்களுடன், 21 கோடியே 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஒவ்வொரு குடியிருப்பும் சுமார் 400 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள 256 அடுக்குமாடி குடியிருப்புகள்;

என மொத்தம் 139 கோடியே 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள 838 குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் இன்று திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.பா. பெஞ்சமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு.பி.கே. வைரமுத்து, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திரு.ச. கிருஷ்ணன், இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம் மற்றும் தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் முதன்மைச் செயலாளர் / மேலாண்மை இயக்குநர் திரு.ஷம்பு கல்லோலிகர், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 16.8.2018**